# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

## விளம்பி வருடம் ஆவணி மாதம் 4–ஆம் நாள் ஆகஸ்ட் மாதம் 20.08.2018ம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள் விபரம்

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 1** | நகராட்சி ஆணையர் அவர்களின் ஜீலை–2018ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:–**<br><br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:– 100**<br>**தீர்மானம்:–** பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண்–2** | நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை–2018ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:–**<br><br>பதிவு செய்யலாம். | **தீர்மான எண்:– 101**<br>**தீர்மானம்:–** பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண்–3** | அறந்தாங்கி நகராட்சிகுட்பட்ட பகுதியில் கடந்த 30 வருடங்களாக சேகரிக்கப்பட்டு புதுக்கோட்டை சாலையில் உள்ள கலவை உரக்கிடங்கில் குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பை கழிவுகளை பயோ மைனிங் முறையில் தரம் பிரித்து கலவை உரக்கிடங்கின் நிலத்தினை மீட்கும் பணி மேற்கொள்ள ரூ.362.00லட்சத்திற்று இந்நகர்மன்ற தீர்மான எண்.22 நாள்.16.05.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி கலவை உரக்கிடங்கினை மீண்டும் ஸ்டெப்லேண்ட் சர்வே கன்சல்டன்ட்ஸ், புதுச்சேரி நிறுவனம் மூலம் மறு சர்வே மேற்கொண்டதில் அதில் உள்ள குப்பை கழிவுகளின் அளவிற்கேற்ப (45105 மீ3 ) திருத்திய மதிப்பீடு ரூ.297.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்:– 102**<br>**தீர்மானம்:–** அலுவலகக் குறிப்புகள் 1,2,3 அனுமதிக்கப்பட்டன |

<table>
<tr><td></td><td>

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை முழு மான்யமாக வழங்கிட அரசினை கோரலாம்
3. நகராட்சி பங்குத் தொகை ஏதும் வழங்க வேண்டியிருப்பின் அதனை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்

</td><td></td></tr>
<tr><td><u>பொருள் எண்.–4</u></td><td>

இந்நகராட்சி பகுதியில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 02.03.2018 முதல் 12.03.2018 வரை நடைபெற்ற ஆய்வுக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் (Meeting Minutes), அவர்களின் கடிதம் ந.க.எண்.7616/2018/பி3 நாள்06.06.2018 மற்றும் தூய்மை இந்தியா திட்டம் 7வது மாநில உயர்மட்ட குழு கூட்டம் 13.08.2018ன் தீர்மாண பொருளில் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சியில் நுண் உர மையம் (Micro Compost Center) அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சி கோபாலசமுத்திரம் பகுதியில் வார்டு பி பிளாக் 17 நகரளவு எண்.2 பகுதியில் நீரேற்று நிலையம் அமைந்துள்ள வளாகத்தில் உள்ள காலியிடத்தில் நுண் உர மையம் அமைக்க ரூ.50.00லட்சம் இந்நகர்மன்ற தீர்மான எண்.3 நாள்.16.04.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்மானத்தினை கீழ்கண்டுள்ளவாறு திருத்தம் செய்து மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு<br>(ரூ. லட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>கோபால சமுத்திரம் நீரேற்று நிலைய வளாகத்தில் நுண் உரமையம் அமைத்தல், சுற்றுச்சுவர் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>ரூ.55.00லட்சம்</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>ரூ.55.00 லட்சம்</td></tr>
</table>

</td><td>

<u>தீர்மான எண்:– 103</u>

<u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்புகள் 1,2,3 அனுமதிக்கப்பட்டன

</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு.</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி தொகையினை முழு மான்யமாக வழங்கிட அரசினை கோரலாம்<br>3. நகராட்சி பங்குத் தொகை ஏதும் வழங்க வேண்டியிருப்பின் அதனை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் | |
| **<u>பொருள் எண்.–5</u>** | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் கடித ந.க.எண்.20555/2018/ஆர்1 நாள்.31.07.2018-ல் வழங்கப்பட்ட அறிவுரையின்படி அறந்தாங்கி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட புரதான சின்னங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றை பாதுகாக்கும் வகையில் Bio- Diversity Management Committee அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br><br>1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>2. மேற்படி அறிவுரை மற்றும் வழிகாட்டுதலின்படி குழு அமைக்கவும் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.5176/2018/எச்) | **<u>தீர்மான எண்:– 104</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப்பட்டன |
| **<u>பொருள் எண்.–6</u>** | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் கடித ந.க.எண்.2055/2018/ஆர் நாள்.23.07.2018-ல் வழங்கப்பட்ட அறிவுரையின்படி அறந்தாங்கி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட கட்டிடங்களுக்கு சொத்து வரி 01.04.2018 முதல் சொத்து வரி மறு சீராய்வு (General Revision of Property Tax) செய்ய ஏதுவாக அரசு ஆணை (எம்.எஸ்) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ.4) துறை நாள்.19.07.2018 மற்றும் அரசு ஆணை (எம்.எஸ்) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ.4) துறை நாள்.26.07.2018 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **<u>தீர்மான எண்:– 105</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** பதிவுசெய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு:-</u>**<br><br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் ( ந.க.எண்.4879/2018/அ1) | |
| **<u>பொருள் எண்.–7</u>** | தொழில்வரி அறந்தாங்கி நகராட்சியில் 2018–19ம் இரண்டாம் அரையாண்டு முதல் தொழில்வரி உயர்வு செய்யப்பட்ட அறிக்கையினை மாவட்ட அளவில் தினபூமி நாளிதழில் 15.06.2018ந் தேதியன்று விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. வட்டார தினபூமி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ள தொகை பட்டியல்படி ரூ.11844/ஐ (பில் எண்.70184 நாள்.15.06.2018) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br><br>மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.3322/2018 /அ1) | **<u>தீர்மான எண்:– 106</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண்–8</u>** | இந்நகராட்சி எல்.என்.புரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் தலைமை ஆசிரியரின் கோரிக்கையினை ஏற்று விழா அரங்கம் அமைக்கவும், சுற்றுச்சுவர் பராமரிக்கவும், பெயர் பலகை அமைக்க அனுதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.10.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:– 107</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப்பட்டன |

| | | |
|---|---|---|
| <u>பொருள் எண்—9</u> | இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் அருகே செயல்பட்டு வரும் அம்மா உணவகம் முன்புறம் உள்ள காலியிடத்தில் புதுக்கோட்டை தென்னை உழவர் உற்பத்தியாளர் கம்பெனி லிமிட்டெட், அறந்தாங்கி நிறுவனம் மூலம் நீரா பானம் விற்பனை மையம் (KIOSK) அமைத்திட புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பரிந்துரை செய்யபட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி நிறுவனத்திற்கு பொதுப்பணி துறை மதிப்பீட்டினை விட கூடுதலான மாத வாடகை நிர்ணயம் செய்து தரை வாடகை அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் அம்மா உணவகம் முன்புறம் உள்ள காலியிடத்தில் புதுக்கோட்டை தென்னை உழவர் உற்பத்தியாளர் கம்பெனி லிமிட்டெட், அறந்தாங்கி நிறுவனம் மூலம் நீரா பானம் விற்பனை மையம் (KIOSK) அமைத்திட தரை வாடகை அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்து வழங்க அனுமதிக்கலாம். (ந.க.எண். 4676/ 2018/அ1) | <u>தீர்மான எண்:—</u> **108**<br><u>தீர்மானம்:—</u> அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப்பட்டன |
| <u>பொருள் எண்—10</u> | அறந்தாங்கி நகராட்சி கலவை உரக்கிடங்கில் தங்களது சொந்த முதலீட்டில் மாட்டுப்பண்ணை வைத்து இரண்டு வருடங்களுக்கு பராமரிப்பதற்கு தகுதிவாய்ந்த தனிநபர்/ விவசாயிகள்/ தொண்டு நிறுவனங்கள் நகராட்சியில் அன்றாடம் உற்பத்தியாகும் சிறு உணவுகழிவுகள், வாழை இலைகள்,பூக்கள், சந்தைக்கழிவுகளை தீவனமாக பயன்படுத்தவும், பணிகளை மேற்கொள்ள உண்டான ஒப்பந்த அறிவிப்பு மாவட்ட அளவில் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் தொகை ரூ.12600/-ஐ தினசூரியன் தமிழ் நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது . | <u>தீர்மான எண்:—</u> **109**<br><u>தீர்மானம்:—</u> அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண் .3681/2018/எச்1) | |
| **<u>பொருள் எண்–11</u>** | அறந்தாங்கி நகராட்சி எல்லைப்பகுதிகளுக்குள் தெருநாய்கள் மற்றும் வெறிப்பிடித்த நாய்களால் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் மற்றும் இடையூறு ஏற்படுவதாக , அறந்தாங்கி நுகர்வோர் சங்கம் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது . எனவே, நாய்களை பிடித்து அப்புறப்படுத்த ஏற்கெனவே, நாய்களை பிடித்து அப்புறப்படுத்திய தனியார் நிறுவனம் மூலம் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ . 2,10,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதியும் பொது மக்களின் நலன் கருதியும்,மேற்காணும் பணிகளை மேற்கொள்ளலாம் . | **<u>தீர்மான எண்:– 110</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண்–12</u>** | அறந்தாங்கி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களில் மட்கும், மட்காத குப்பைகளை தனித்தனியாக வண்டியில் சேகரிக்க வண்டியில் இரும்பால் ஆன தடுப்பு கதவு அமைத்து தரவும், செலவுத்தொகை ரூ . 40000/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண் .4246/2018/எச்1) | **<u>தீர்மான எண்:– 111</u>**<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப்பட்டன |

<table>
<tr>
<td><u>பொருள் எண்–13</u></td>
<td>இந்நகராட்சியில் உள்ள பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்களை பராமரிப்பதற்கு 22 பணியாளர்களை வழஙகி ஒராண்டு காலத்திற்கு பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.201 நாள்.12.01.2018–ல் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு<br>
<table>
<tr><td>வரிசை எண்</td><td>ஒப்பந்தகாரர்களின் விலைப்புள்ளி</td><td>நகராட்சியின் மதிப்பீட்டு தொகை</td><td>ஓப்பீடு</td></tr>
<tr><td>1</td><td>HMS நிறுவனத்தார் 24,99,951</td><td>24,99,999</td><td>0.001 % குறைவு</td></tr>
</table>
<br>HMS நிறுவனத்தார் மதிப்பீட்டு தொகையை விட 0.001 % குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br><br>
<u>அலுவலகக்குறிப்பு :–</u><br><br>
1 . மன்றம் அனுமதிக்கலாம்<br><br>
2. பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண் . 3802/2017/எச்1)</td>
<td><u>தீர்மான எண்:– 112</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப்பட்டன</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்–14</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சியில் 2017–2018ம் ஆண்டு இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.5 களப்பகாடு பகுதியில் ஆழ்குழாயுடன் கூடிய சிறு மின் விசை பம்பு அமைக்கும் பணி மேற்கொள்ள 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.</td>
<td><u>தீர்மான எண்:– 113</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்புகள் 1,2,3 அனுமதிக்கப்பட்டன</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1) | திரு.கே. இராமநாதன்,<br>போர்வெல் ஒப்பந்ததாரர், ஆலங்குடி | 0.08 % குறைவு |
| 2) | திரு.அ. இராஜாகண்ணு,<br>போர்வெல் ஒப்பந்ததாரர், அறந்தாங்கி | 0.83 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு திரு.கே. இராமநாதன், போர்வெல் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.08 சதவிகிதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி திட்டப்பணியாக உள்ளதால் நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.7032/2017/இ1)

</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்–15</td><td>அறந்தாங்கி நகராட்சியில் 2017–2018ம் ஆண்டு இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.14 அவுலியா நகர் பகுதியில் ஆழ்குழாயுடன் கூடிய சிறு மின் விசை பம்பு அமைக்கும் பணி மேற்கொள்ள 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்:– 114<br>தீர்மானம்:– அலுவலகக் குறிப்புகள் 1,2,3 அனுமதிக்கப்பட்டன</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1)</td><td>திரு.கே. இராமநாதன்,<br>போர்வெல் ஒப்பந்ததாரர், ஆலங்குடி</td><td>0.08 % குறைவு</td></tr>
<tr><td>2)</td><td>திரு.அ. இராஜாகண்ணு,<br>போர்வெல் ஒப்பந்ததாரர், அறந்தாங்கி</td><td>0.83 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:–</u>
<ol>
<li>மன்றம் அனுமதிக்கலாம்</li>
<li>மேற்படி பணிக்கு திரு.கே. இராமநாதன், போர்வெல் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.08 சதவிகிதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி திட்டப்பணியாக உள்ளதால் நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.7032/2017/இ1)</li>
</ol>
</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்–16</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொது நிதியின் கீழ் ரூ.2.75 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி புதுக்கோட்டை ரோடு கலவை உரக்கிடங்கு மற்றும் மயான வளாகத்தில் உள்ள மட்டுக் கொட்டிலில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளும் அமைக்கும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.16.05.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.</td>
<td><u>தீர்மான எண்:– 115</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்புகள் 1,2,3 அனுமதிக்கப்பட்டன</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1)</td><td>திரு.எஸ். ரமேஷ்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,</td><td>0.17 % குறைவு</td></tr>
<tr><td>2)</td><td>திரு.எஸ். கோபி<br>நகராட்சி ஒப்பந்ததாரர்</td><td>1.77 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:–</u>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. மேற்படி பணிக்கு திரு.எஸ். ரமேஷ், நகராட்சி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.17 சதவிகிதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.<br>
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.4518/2018/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்–17</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொது நிதியின் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி ஆவுடையார் கோவில் ரோடு மற்றும் மண்டிக்குளம் மாரியம்மன் கோவில் செல்லும் சாலை இணைப்பில் பழுதடைந்த சிறுபாலத்தை அகற்றி ஆர்.சி.சி. சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.16.05.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.</td>
<td><u>தீர்மான எண்:– 116</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்புகள் 1,2,3 அனுமதிக்கப்பட்டன</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1)</td><td>திரு.எஸ். ரமேஷ்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,</td><td>0.10 % குறைவு</td></tr>
<tr><td>2)</td><td>திரு.எஸ். கோபி<br>நகராட்சி ஒப்பந்ததாரர்</td><td>1.16 % அதிகம்</td></tr>
</table>
<br>
<u>அலுவலகக் குறிப்பு:–</u>
<br><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. மேற்படி பணிக்கு திரு.எஸ். ரமேஷ், நகராட்சி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.10 சதவிகிதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.<br>
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.4487/2018/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண்–18</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொது நிதியின் கீழ் ரூ.6.25 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி புதுக்கோட்டை ரோடு கலவை உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 1/3 கூரை அமைக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் இரும்பு ராடுகளுக்கு வர்ணம் பூசும் பணி மற்றும் கூடுதல் ராடுகள் மற்றும் பர்லின் போன்ற அமைப்புகள் அமைக்கும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.16.05.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 27.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.</td>
<td><u>தீர்மான எண்:– 117</u><br><u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்புகள் 1,2,3 அனுமதிக்கப்பட்டன</td>
</tr>
</table>

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1) | திரு.எஸ். ரமேஷ்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர், | 0.07 % குறைவு |
| 2) | திரு.எஸ். கோபி<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 2.21 % அதிகம் |

**<u>அலுவலகக் குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு திரு.எஸ். ரமேஷ், நகராட்சி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.07 சதவிகிதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதியும் திட்டப்பணியினை விரைந்து முடிக்கவும் நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.4518/2018/இ1)

**ஓம்/–வே. நவேந்திரன்**
**தனி அலுவலர்**
**அறந்தாங்கி நகராட்சி**